தமிழ்ச்சோலை - பிரான்சு
Tamoulcholai-France

# திருக்குறள் திறன் போட்டி 2026

## வள்ளுவர் ஆண்டு - 2057



நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்

# தமிழ்ச்சோலை மட்டப் போட்டி நெறிமுறைகள்

தமிழ்ச்சோலைப் பள்ளிமட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் அனைத்துப் பிரிவுகளின் போட்டியாளர்களும், தமது பிரிவுக்குரிய அனைத்துக் குறள்களையும் மனனஞ்செய்து, ஒப்புவித்தல் வேண்டும்.

போட்டியாளர்கள் குறளின் பொருளறிந்து மனனம் செய்வது போட்டிக்கான திறனை மேம்படுத்தும்.

## போட்டிக்கான புள்ளிகள்

1. மனனம்
2. ஒலிப்பு
3. பலுக்கல்
4. உணர்வு
5. நிலை

என்பனவற்றின் அடிப்படையில் வழங்கப்படும்.

**எல்லாப்பிரிவுகளிலும் அதிகாரம் கூறப்பட வேண்டும்.**

பள்ளியின் அனைத்து மாணவர்களும் திருக்குறள் திறன் போட்டியில் பங்கு கொள்வது அவர்களின் தமிழ் மொழித் திறனை மேம்படுத்தும். பள்ளி மட்டத்தில் பங்கு கொள்ளும் மாணவர்களை ஊக்குவிப்பது அந்தந்த பள்ளியின் கடமையாகும்.



# திணைக்கள மட்டப் போட்டி நெறிமுறைகள்

## மழலையர் பிரிவு

திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் இரண்டு குறள்களைக் கூற வேண்டும்.

---

## சிறுவர் பிரிவு

முதற்சொல் எழுதப்பட்டிருக்கும் திருவுளச்சீட்டின் மூலம் இரண்டு குறள்களுடன் மேலதிகமாக ஐந்தாவது குறளையும் அதன் பொருளையும் கூறவேண்டும்.

---

## கீழ்ப்பிரிவு – நடுவண் பிரிவுகள் – மேற்பிரிவுகள் – உயர் பிரிவுகள் – மீயுயர் பிரிவு

- திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் **இடைச்சொற்களைக் கொண்டு** குறள்கள் கேட்கப்படும்.
- எல்லாப் பிரிவிலும் அதிகாரம் கூறப்படல் வேண்டும்.

## குறள் ஒப்புவிப்பின்போது

1. **மனனம்**
2. **ஒலிப்பு**
3. **பலுக்கல்**
4. **உணர்வு**
5. **நிலை**

என்பனவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

திணைக்களமட்டப் போட்டியின்போது பார்வையாளர்கள் உள்நுழைய இசைவளிக்கப்படமாட்டார்கள்.



# இறுதிப் போட்டி நெறிமுறைகள்

## மழலையர் பிரிவு

- திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் **இரண்டு குறள்களைக்** கூற வேண்டும்.

---

## சிறுவர் பிரிவு

- திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் **இரண்டு குறள்களுடன் மேலதிகமாக ஐந்தாவது குறளையும் அதன் பொருளையும்** கூறவேண்டும். (திருவுளச்சீட்டில் குறளின் முதற் சொல் மட்டும் எழுதப்பட்டிருக்கும்)

---

## கீழ்ப்பிரிவு – நடுவண் பிரிவுகள் – மேற்பிரிவுகள் – உயர் பிரிவு – மீயுயர் பிரிவு

- திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் **இடைச்சொல்லைக் கொடுத்துக்** குறள்கள் கேட்கப்படும்.

- **மேற்பிரிவிலிருந்து** ...

1. அதிகாரத்தைக் குறிப்பிட்டு **அதிகார எண்** கேட்கப்படும்.
2. குறிப்பிட்ட குறளுக்குரிய **அதிகாரத்தைக் கூறுமாறு** கேட்கப்படும்.
3. குறள்களின் **பொருள்களுக்குரிய** விளக்கம் தொடர்பான **வினாக்கள்** வினவப்படும்.

---

**அனைத்துப் பிரிவுகளிலும்**

1. **மனனம்**
2. **ஒலிப்பு**
3. **பலுக்கல்**
4. **உணர்வு**
5. **நிலை**

**என்பன கவனிக்கப்படும்.**



# திருக்குறள் திறன் போட்டி – 2026

தமிழ்ச்சோலை-பிரான்சு
Tamoulcholai-France

## மீயுயர் பிரிவு

**31.08.2006 இற்கு முன் பிறந்தோர்**

### 1. அதிகாரம் 88 : பகைத்திறந்தெரிதல்

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு.

பொருள் : பகைவரையும் நட்பாகக் கொண்டு பழகும் பண்புடையவரின் மதிப்புமிகுந்த செயல்களாலேயே உலகம் நிலைக்கிறது.

### 2. அதிகாரம் 85 : புல்லறிவாண்மை

அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு

பொருள் : இல்லாமை பலவற்றுள் மிகக் கொடியது அறிவின்மையே. மற்றச் செல்வம் இல்லாமையை உலகத்தார் இல்லாமையாகக் கருதமாட்டார்.

### 3. அதிகாரம் 90 : பெரியாரைப் பிழையாமை

எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்

பொருள் : தீயினால் சுடப்பட்டாலும் உயிர் பிழைத்தல் கூடும். பெரியோர்க்குத் தவறு செய்து ஒழுகுவோர் ஒரு வகையாலும் தப்பார்.

### 4. அதிகாரம் 98 : பெருமை

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

பொருள் : எல்லா உயிருக்கும் பிறப்பு ஒரு தன்மையானதே, அவரவர் செய்யும் தொழில்களின் வேறுபாடுகளால் ஏற்படும் சிறப்பு நிலைகள் ஒரு நிகரானவையல்ல.

மறுபக்கமும் பார்க்கவும்

### 5. அதிகாரம் 99: சான்றாண்மை

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு

பொருள் : தமக்குத் தீயன செய்தார்க்கும் நல்லனவே செய்யாவிட்டால் சான்றாண்மையால் என்ன பயன் ?

### 6. அதிகாரம் 21 : தீவினை அச்சம்

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்

பொருள் : தீயசெயல்கள் தீமையை விளைவிக்கும் என்பதால், அச்செயல்களைத் தீயை விடக் கொடுமையானவையாகக் கருதி அவற்றைச் செய்ய அஞ்ச வேண்டும்.

### 7. அதிகாரம் 14 : ஒழுக்கமுடைமை

அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

பொருள் : பொறாமை உள்ளவனிடத்தில் ஆக்கம் இல்லாதது போல, ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் உயர்வு இல்லை.

### 8. அதிகாரம் 73 : அவை அஞ்சாமை

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்

பொருள் : நல்லனவற்றை பலர் கூடிய அவையில், அச்சத்தினால் அவர்க்கு விளங்குமாறு சொல்லத் தெரியாதவர், பலதுறை நூல்களைக் கற்றிருந்தாலும் உலகிற்குப் பயன்படாதவரே.

திருக்குறள் திறன் போட்டி 2026

வள்ளுவர் ஆண்டு - 2057



நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்